நகல்

தமிழ் நாடு அரசு

ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்
(நக6) துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

கடிதம் (பல்வகை) எண்.806 நாள் 4.6.1983
21, வைகாசி ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014

---

அனுப்புநர்

ரி.பு.பண்டரிநாதன், பி.காம்,
அரசு துணைச் செயலாளர்,.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை - 600 001.

பொருள்: குத்தகை - திண்டுக்கல் நகராட்சி - ஆத்தூர் நீர் தேக்கத்திலுள்ள தென்னை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமை - குத்தகை நீட்டித்தல் - குறித்து.

பார்வை: 1. திண்டுக்கல் நகராட்சி ஆணையரின் 11.1.1983 நாளிட்ட கடித எண்.14766/82

2. தங்களின் 28.3.83 நாளிட்ட கடித எண். ஓ.மு. 20627/83, ஆர்3.

. . .

பார்வையில் கண்டுள்ள கடிதங்களின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. திண்டுக்கல் நகராட்சியைச் சார்ந்த ஆத்தூர் நீர்த்தேக்கத்திலுள்ள தென்னை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமையை 1982-83ம் ஆண்டு குத்தகைதாரரான திரு கணேசன் என்பவருக்கு மேலும் நான்கு ஆண்டுகளுக்கு, அதாவது 1983-84லிருந்து 1986-87 வரைக்கும் வருடத்திற்கு முந்தைய குத்தகை தொகையில் 10% வீதம் ஏற்றி குத்தகையை நீட்டித்துத் தரக்கோரிய பார்வை ஒன்றியல் கண்டுள்ள திண்டுக்கல் நகராட்சி ஆணையரது செயற்குறிப்பை அரசு பரிசீலித்தது.

2. தென்னை மரங்களைப் பொறுத்த அளவில் அதன் பலன் உடனடியாகக் கிடைக்காது என்பதால், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பொது ஏலம் நடத்தலாம் என்று அரசு கருதுகிறது. எனவே, திண்டுக்கல் நகராட்சியைச் சார்ந்த ஆத்தூர் நீர்த்தேக்கத்திலுள்ள தென்னை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமையை 1982-83ம் ஆண்டு குத்தகைதாரரான திரு. கணேசன் என்பவருக்கு மேலும் 2 ஆண்டுகளுக்கு அதாவது 1983-84 மற்றும் 1984-85க்கு ஒவ்வொரு ஆண்டும் முந்திய ஆண்டு குத்தகைத் தொகையில் 10% ஏற்றி குத்தகைக்கு விட அரசு அனுமதியளிக்கிறது. 1985-86 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்படி உரிமையை பொது ஏலத்தில் விடுமாறு திண்டுக்கல் நகராட்சி ஆணையருக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒம்) அரசு துணைச் செயலாளருக்காக.

/ உண்மை நகல் /

ஆராய்வாளர் அலுவலகம்.
இ' பிரிவு.

மே.கு.எண். /இ2/60660/83,
நாள் 5.7.83

சார்பு நிலை அலுவலர்களுக்கு பிரிவு 3-இன்படி அனுப்பப்படுகிறது.

அசல் கடிதம் ப.கோ.13இல் முடிக்கப்படலாம்.

(ஒம்) கோ. நாகநாதன்,
துணை ஆராய்வாளர்.

நகல்:- இருக்கை இ1 முதல் இ7 வரை.

/ உண்மை நகல் /

கண்காணிப்பாளர். 11.7

11.7.83